# பத்திரிகைக் குறிப்பு

**மார்ச் 2015னுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் வரவினங்கள்) - தமிழ்நாடு அரசு - சட்டப்பேரவை முன் வைக்கப்பட்ட நாள் 2 செப்டம்பர் 2016**

இந்த அறிக்கை ₹ 175.90 கோடி மதிப்பிற்கு, ஒரு செயலாக்கத் தணிக்கை உள்பட, வரி, உரிமைத் தொகை, வட்டி, தண்டத் தொகை முதலியவற்றின் விதியாமை/குறைவான விதிப்பு குறித்த 22 பத்திகளை கொண்டதாகும். சில முக்கிய கண்டுபிடிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

## I பொது

2014-15ஆம் ஆண்டின் மாநில அரசின் மொத்த வருவாய் வரவினங்களான ₹ 1,22,420.44 கோடி, வரி வருவாய் ₹ 78,656.54 கோடி மற்றும் வரியல்லாத வருவாய் ₹ 8,350.60 கோடியை உள்ளடக்கியதாகும். இந்திய அரசின் வரி வருவாயிலிருந்து மாநிலத்தின் வரிப் பங்காக பெறப்பட்ட தொகை ₹ 16,824.03 கோடி. மானிய உதவியாகப் பெறப்பட்ட தொகை ₹ 18,589.27 கோடி. மொத்த வருவாய் வரவினத்தில் மாநில அரசால் 2014-15ல் ஈட்டப்பட்ட வருவாய் 71 விழுக்காடாகும். இது 2013-14ல் 77 விழுக்காடாக இருந்தது. விற்பனை வரி (₹ 57,190.80 கோடி), மாநில அரசின் வரி வருவாயில் பெரும் பங்கு (73 விழுக்காடு) வகிக்கிறது. வட்டி வரவுகள், ஈவு மற்றும் இலாப வருவாய் (₹ 2,588.83 கோடி) வரி அல்லாத பிற வருவாயில் 31 விழுக்காடு வகிக்கிறது.

**(பத்தி 1.1)**

வணிக வரி, மாநில ஆயத் தீர்வை, வாகனங்கள் மீதான வரி, முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம், மின் தீர்வை, சுரங்கம் மற்றும் கனிமங்கள் மற்றும் நில வருவாய் சம்மந்தமான பதிவுருக்களை 2014-15ஆம் ஆண்டில் தேர்வாய்வு செய்ததில், 3,951 இனங்களில் ₹ 803.32 கோடிக்கு குறைவான வரி மதிப்பீடுகள், குறைவாக வரி விதித்தல், வருவாய் இழப்பு மற்றும் பிற குறித்துரைகள் தெரியவந்தன.

**(பத்தி 1.9)**

## II மதிப்புக் கூட்டு வரி/மத்திய வற்பனை வரி

**தமிழ்நாட்டில் மதிப்புக் கூட்டு வரியின் கீழான வரிமதிப்பீட்டு முறை** குறித்த செயலாக்கத் தணிக்கை பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

- வரிவிதிப்பு அதிகாரிகளால் இறுதி செய்யப்படும் வரிமதிப்பீடுகளை கண்காணிப்பதற்காக நடைமுறையில் உள்ள அமைப்புமுறை திறம்மிக்கதாக இல்லை.

  **(பத்தி 2.4.7.1)**

- வரிமதிப்பீடு செய்யப்பட்டதாக கருதப்படுவதற்கான நிலைமைகள் பின்பற்றப்படவில்லை. எனவே தகுதியற்ற இனங்களும் வரிமதிப்பீடு செய்யப்பட்டதாக தவறாக கருதப்பட்டன.

  **(பத்தி 2.4.7.2)**

- இனங்கள் தேர்ந்தெடுக்கப்படுவதில் காலதாமதம், குறைவான அளவில் தேர்ந்தெடுப்பு, குறைவான பாதிப்பு விளைவிக்கக்கூடிய வணிகர்களின் தேர்ந்தெடுப்பு முதலிய குறைபாடுகள் விரிவான கூர்ந்தாய்வுக்காக இனங்கள் தேர்ந்தெடுக்கப்படும் முறையில் காணப்பட்டன. கூர்ந்தாய்வு செய்து முடிப்பதற்கான இலக்குத் தேதிகள் வரிவிதிப்பு அதிகாரிகளால் பின்பற்றப்படவில்லை.

  **(பத்தி 2.4.7.4)**

- தகவல் பகுப்பாய்வு பிரிவின் அறிக்கைகள், படிவம் WWஇல் தணிக்கை அறிக்கை, துறையின் அக இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட இறக்குமதிகளின் விவரங்கள் போன்று பல்வேறு ஆதாரங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் வரிவிதிப்பு அதிகாரிகளால் வரிமதிப்பீட்டு நடவடிக்கையில் திறம்பட பயன்படுத்தப்படவில்லை.

**(பத்திகள் 2.4.8.1 முதல் 2.4.8.3)**

- ஆண்டு ஆய்வு மற்றும் மேலோட்டமான ஆய்வு மூலம் தொடர்ச்சியான மற்றும் திறம்மிக்க கண்காணிப்பு உயர் அதிகாரிகளால் மேற்கொள்ளப்படாததாலும், உள் தணிக்கை மேற்கொள்ளப்படாததாலும் மற்றும் வரிமதிப்பீட்டினை இறுதி செய்வதில் வரிவிதிப்பு அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட வரிமதிப்பீட்டிற்கு முந்தைய பதிவேடு முறையாக பராமரிக்கப்படாததாலும், உள் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு அமைப்பு முறை பலவீனமாயிற்று.

**(பத்தி 2.4.10)**

தமிழ்நாட்டில் மதிப்புக் கூடு வரி முறையை நடைமுறைப்படுத்துதல் குறித்த செயலாக்கத் தணிக்கை மீதான தொடர் நடவடிக்கை பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

- கடப்பு அனுமதிச் சீட்டு அமைப்பின் கீழ் மரத்தை கொண்டுவருவதற்கான திருத்தம் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தில் மேற்கொள்ளப்படாததால், பிற மாநிலங்களுக்கு மரம் எடுத்துச் செல்வது தொடர்ந்து கண்காணிக்கப்படவில்லை.

**(பத்தி 2.5.4.1)**

- வரிவிவர அறிக்கைகளின் நிர்ணயிக்கப்பட்ட வடிவமைப்பு மாற்றி அமைக்கப்படாததால், கோரப்பட்ட வரிவிலக்கு/சலுகை வரி வீதத்தின் சரித்தன்மையை உறுதி செய்ய இயலவில்லை

**(பத்தி 2.5.4.2)**

- மென்பொருளில் செல்லத்தக்க கட்டுப்பாடுகளை கொண்டு வராததால், கணினி அமைப்பில் தவறான/சரியற்ற தகவல்கள் தொடர்ந்து கைப்பற்றப்பட்டன.

**(பத்தி 2.5.4.3)**

- பொருட்கள் நுழைவு பட்டியலில் வரிசெலுத்துவோர் அடையாள எண் இல்லாத காரணத்தினால், வணிகர்களையும், தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் அவர்களது பதிவு நிலையையும் அறிவதில் கடினம் தொடர்கிறது.

**(பத்தி 2.5.4.4)**

- புதிதாக பதிவு செய்யப்பட்ட வணிகர்களால், பதிவுக்கு பின் வரிவிவர அறிக்கைகள் தாக்கல் செய்யப்படுவதை கண்காணித்தல் மற்றும் கூர்ந்தாய்வு செய்து முடிப்பதற்கான அறிவுறுத்தல்கள் வரிவிதிப்பு அதிகாரிகளால் கடைப்பிடிக்கப்படவில்லை.

**(பத்தி 2.5.4.5 மற்றும் 2.5.4.6)**

- மேலாண்மை தகவல் முறை தொகுப்பில் தகவல்கள் இருந்தாலும், திருப்பி ஒப்படைக்கப்படாத கடப்பு அனுமதிச் சீட்டுகள் குறித்து வரிவிதிப்பு வட்டங்களின் வரிவிதிப்பு அதிகாரிகளாலும் மற்றும் சோதனைச் சாவடி அதிகாரிகளாலும் எந்த நடவடிக்கையும் தொடங்கப்படவில்லை.

**(பத்தி 2.5.4.7)**

பதிவுருக்களின் குறுக்கு சரிபார்ப்பு தணிக்கையால் மேற்கொள்ளப்பட்டபோது, நான்கு வணிகர்களால் மறைக்கப்பட்ட காற்றலைகளின் விற்பனை கண்டறியப்பட்டது. மறைக்கப்பட்ட விற்பனைத் தொகை மீது விதிக்கப்படவேண்டிய வரி மற்றும் தண்டத் தொகை ₹ 2.08 கோடியாகும்.

**(பத்தி 2.6.3.1)**

மறைக்கப்பட்ட கிரானைட் தொகுதிகளின் விற்பனை தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டதால், வரிமதிப்பீடு திருத்தி அமைக்கப்பட்டு, வரி மற்றும் தண்டத்தொகை என்ற வகையில் ₹ 5.15 கோடி கூடுதல் கேட்பு எழுப்பப்பட்டது.

**(பத்தி 2.6.3.2)**

படிவச் சான்றிதழ்களால் உள்ளடக்கப்படாத சிமெண்டின் மாநிலங்களுக்கிடையேயான விற்பனைக்கு பொருந்தக்கூடிய வரிவீதத்தை நிர்ணயிப்பதில், கூடுதல் விற்பனை வரிக் கூறு கருதப்படாததால்/தவறான அடுக்கில் கூடுதல் விற்பனை வரியின் வீதம் கடைப்பிடிக்கப்பட்டதால், வரி ₹ 1.92 கோடி குறைவாக விதிக்கப்பட்டது.

**(பத்தி 2.6.7.2)**

## III முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம்

“பல்வேறு உடன்படிக்கை ஆவணங்கள் மற்றும் அவை சார்ந்த அதிகார ஆவணங்களின் பதிவு” குறித்த தணிக்கை பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

அதே சொத்துக்கள் குறித்தும் மற்றும் அதே அல்லது தொடர்புடைய நபர்களிடையே அளிக்கப்பட்ட அதிகார ஆவணங்களும் விற்பனை ஒப்பந்தமும் பதிவு செய்யப்படும் போது, அவற்றை இணைக்க பதிவு அதிகாரிகள் தவறினர். இதனால், கைமாறு தொகை கருதி அளிக்கப்பட்ட அதிகார ஆவணம், பொது அதிகார ஆவணமாக தவறாக வகைப்படுத்தப்பட்டு, முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் ₹ 5.69 கோடி குறைவாக விதிக்கப்பட்டது.

**(பத்தி 3.4.2)**

சொத்தின் சுவாதீனம் அளிக்கப்பட்ட விற்பனை உடன்படிக்கை, சுவாதீனம் அளிக்கப்படாததாக தவறாக வகைப்படுத்தப்பட்டமையால் முத்திரைத் தீர்வை ₹ 4.92 கோடி குறைவாக விதிக்கப்பட்டது.

**(பத்தி 3.4.4)**

ஆவணங்களின் தவறான வகைப்பாட்டினால், ஆறு இனங்களில், முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் ₹ 6.88 கோடி குறைவாக விதிக்கப்பட்டது.

**(பத்தி 3.5.2)**

47 ஆவணங்களில் சொத்துக்கள் குறைவாக மதிப்பிடப்பட்டதால், முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் ₹ 2.84 கோடி குறைவாக விதிக்கப்பட்டது.

**(பத்தி 3.5.1)**

தவறான வீதம் கடைப்பிடிக்கப்பட்டதால், முத்திரைத் தீர்வை ₹ 1.14 கோடி குறைவாக விதிக்கப்பட்டது.

**(பத்தி 3.5.5)**

சொத்துரிமை மாற்று ஆவணங்கள் இரத்து ஆவணங்களாக தவறாக வகைப்படுத்தப்பட்டதினால், 303 இனங்களில், முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் ₹ 2.12 கோடி குறைவாக விதிக்கப்பட்டது.

**(பத்தி 3.5.7)**

செலுத்தப்பட்ட தொகையினை ஒத்திசைவு செய்ய துறை தவறியாதால், அரசின் கணக்கில் ₹ 6.40 கோடி அடையப்பெறவில்லை.

**(பத்தி 3.5.8)**

உள்ளாட்சி அமைப்புகளுக்கு ₹ 2.87 கோடி மாறுதல் மிகுவரி கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**(பத்தி 3.5.9)**

## IV ஏனைய வரி மற்றும் வரியல்லாத வரவினங்கள்

### மின்சார வரி

“மின்சார வரிவிதிப்பு மற்றும் வசூல்” மீதான தணிக்கை பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

- நிறுவனங்களால் விவர அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதை கண்காணிப்பதற்கான அமைப்பு முறை இல்லை. எனவே, மாதாந்திர விவர அறிக்கைகள் சமர்ப்பிக்காதவர்கள் குறித்து மேலான தீர்ப்பின் அடிப்படையிலான மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கான வழிவகையினை திட்டமிட்ட முறையில் நடைமுறைப்படுத்த இயலவில்லை.

**(பத்தி 4.2.3)**

- 2011-12 முதல் 2013-14 வரையிலான காலத்தில், அதிகபட்ச சுமை கேட்பு கட்டணம் மற்றும் அதிக மின்சக்தி நுகர்வுக்கான கட்டணங்கள், மின் பயன்பாட்டுக் கட்டணமாக கருதப்படாததால், மின்சார வரி ₹ 89.30 கோடி குறைவாக விதிக்கப்பட்டது.

**(பத்தி 4.2.5)**